Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 27.04.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 27.04.2026 - திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, 5 நாள் அரசுமுறைப் பயணமாக இமாச்சலப் பிரதேசம் சிம்லாவிற்கு இன்று வருகை தந்தார்.

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் பிஜேபியில் இணைந்த நடவடிக்கையை மாநிலங்களவைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று ஏற்றுக் கொண்டார்.

மருத்துவக் கல்விக்கான நீட் நுழைவுத் தேர்வு அனுமதிச் சீட்டை இன்று முதல் இணைய தளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

CBSE பாடத்திட்டத்தில் மூன்றாம் மொழி கற்பது அவசியமாகும் என்ற அறிவிப்பிற்கு புதுச்சேரி மாநிலத்தில் பல்வேறு கட்சித் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

*முர்மு -1 (3)*

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, 5 நாள் அரசுமுறைப் பயணமாக இமாச்சலப் பிரதேசம் சிம்லாவிற்கு இன்று வருகை தந்தார். அவரது பயணம் குறித்த கூடுதல் தகவல்…

**(வாய்ஸ்)**

*முர்மு - 2 (16)*

**(வாய்ஸ்)**

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை, அம்மாநில ஆளுநர் திரு. கவிந்தர் குப்தா, முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சுகு, சட்டப்பேரவைத் தலைவர் திரு. குல்தீப் சிங் பதானியா, பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் திரு. அனிருத் சிங் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுரேஷ் குமார் காஷ்யப் ஆகியோர், பிற முக்கிய பிரமுகர்களுடன் இணைந்து வரவேற்றனர். நாளை, சிம்லாவில் உள்ள 'லோக் பவன்' வளாகத்தில் ஆளுநரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விருந்து நிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்வார்.

நாளை மறுநாள் குடியரசுத் தலைவர் 'அடல் சுரங்கப்பாதை'க்கு வருகை தரத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தின்போது, அவர் எல்லைச் சாலைகள் அமைப்பின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி, அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சுரங்கப்பாதை குறித்த தகவல்களை அறிந்துகொள்வார்.

தொடர்ந்து, ஏப்ரல் 30 அன்று, பாலம்பூரில் அமைந்துள்ள 'சௌத்ரி சர்வன் குமார் இமாச்சலப் பிரதேச வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்' பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். மேலும், சிம்லாவில் உள்ள 'ARTRAC' மையத்தில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்க உள்ளார்.

***மேற்கு வங்கம் (17)***

மேற்கு வங்கத்தில் 142 தொகுதிகளில் நாளை மறுநாள் நடைபெற உள்ள இரண்டாம் மற்றும் இறுதிகட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது. இதனையடுத்து, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, கட்சியின் மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா ஆகியோர் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளனர்.

திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட கட்சித் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, நலத்திட்டங்கள் யாவும் மக்களை சென்றடைந்ததாகக் கூறினார். மேற்கு வங்கத்தின் வளர்ச்சிக்காகவும், அமைதிக்காகவும் மக்கள் தமது கட்சிக்கு வாக்களிப்பார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். இதனிடையே,

2ஆம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

கொல்கத்தா வடக்கு, கொல்கத்தா தெற்கு, ஹவுரா, ஹூக்ளி உள்ளிட்ட 8 மாவட்டங்களைச் சேர்ந்த சட்டப்பேரவைத் தொகுதிகளில் வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

***மாநிலங்களவை (15)***

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் பிஜேபியில் இணைந்த நடவடிக்கையை மாநிலங்களவைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று ஏற்றுக் கொண்டார். முன்னதாக, ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் திரு. ராகவ் சதா, திரு. அஷோக் மிட்டல், திரு. ஹர்பஜன் சிங், திரு. சந்தீப் பதக், திரு. விக்ரம்ஜித் சனே, திருமதி, சுவாதி மலிவால், திரு. ரஜீந்தர் குப்தா ஆகியோர் பிஜேபியில் இணைவதாக அறிவித்திருந்தனர்.

மாநிலங்களவையில் பிஜேபி உறுப்பினர்களின் எண்ணிக்கை 113ஆக அதிகரித்துள்ளதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரஜிஜு தெரிவித்துள்ளார். சமூக வலைதளத்தில், அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஆம் ஆத்மி கட்சியில் இருந்து பிஜேபியில் இணைந்த மாநிலங்களவை உறுப்பினர்களை வரவேற்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு இணைந்து நாட்டின் வளர்ச்சிக்காக அவர்கள் செயல்படுவார்கள் என்று திரு. கிரண் ரஜிஜு மேலும் கூறியுள்ளார்.

***ராஜ்நாத் சிங் (10)***

கிர்கிஸ்தான் பிஷ்கேக்-ல் நாளை நடைபெற உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாட்டில் பங்கேற்க உள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் உலக அமைதிக்கு இந்தியா உறுதி பூண்டிருப்பதாகவும், பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும் தெரிவிக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியா தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருவதை எடுத்துரைக்கப் போவதாக தெரிவித்துள்ளார். முன்னதாக, ஷாங்காய் ஒத்துழைப்பு பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாட்டில் பங்கேற்க திரு. ராஜ்நாத் சிங் இன்று, கிர்கிஸ்தான் புறப்பட்டுச் சென்றார்.

***நீட் (7)***

மருத்துவக் கல்விக்கான நீட் நுழைவுத் தேர்வு அனுமதிச் சீட்டை neet.nta.nic.in என்ற இணைய தளம் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் மே மாதம் 3ஆம் தேதியன்று, பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை, 552 நகரங்களிலும், 14 வெளிநாடுகளிலும் இத்தேர்வு நடைபெறும். மாணவர்கள் தங்களது ஆதார் அடையாள அட்டை, அனுமதிச் சீட்டு போன்ற ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

***பிரதமர் (12)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று இந்தியா – நியூசிலாந்து இடையே கையெழுத்தான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் எழுதிய கட்டுரையை பகிர்ந்தார். சமூக ஊடகப் பதிவில், அந்த கட்டுரையில் திரு. கோயல் இந்தியா – நியூசிலாந்து ஏற்றுமதிகளின் மீது விதிக்கப்படும் சுங்க வரிகளை நீக்குவது, தொழிலாளர் அடிப்படையிலான துறைகளை ஊக்குவிப்பது, MSME-க்களை வலுப்படுத்துவது குறித்து விரிவாக விளக்கி உள்ளார் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வேளாண்மை மற்றும் பால் வளத்துறைகள் முழுமையாக பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது என்றும், மாணவர்கள் மற்றும்

தொழில் முனைவோர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குவதுடன், வேளாண் உற்பத்தித் திறன் மற்றும் முதலீட்டு உறுதிப்பாடுகளுக்கும் ஆதரவு அளிக்கிறது என்று திரு. மோடி குறிப்பிட்டார்.

***புதுச்சேரி சிபிஎஸ்இ -1 (3)***

CBSE பாடத்திட்டத்தில் மூன்றாம் மொழி கற்பது அவசியமாகும் என்ற அறிவிப்பிற்கு புதுச்சேரி மாநிலத்தில் பல்வேறு கட்சித் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இது குறித்த கூடுதல் தகவல்கள்…

**(வாய்ஸ்)**

***புதுச்சேரி சிபிஎஸ்இ - 2 (15)***

**(வாய்ஸ்)**

புதுச்சேரி மாநில எதிர்கட்சித் தலைவர் திரு. ஆர். சிவா, CBSE பாடத்திட்டத்தில் மும்மொழிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். 2026-27ஆம் கல்வியாண்டில் இருந்து, 6ஆம் வகுப்பு முதல் மும்மொழித் திட்டம் கட்டாயம் என்ற கோட்பாடு திருப்தி அளிக்கவில்லை என்று கூறியுள்ளார். இந்த கோட்பாட்டின்படி, இரண்டு பிராந்திய மொழிகள், ஒரு அந்நிய மொழி கற்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. இதனால், புதுச்சேரியில், பிரெஞ்ச மொழி அகற்றப்படும் ஆபத்து உள்ளதாக, அவர் குறிப்பிட்டுள்ளார். பிரெஞ்ச் கலாச்சாரம் நிறைந்துள்ள புதுச்சேரியில்,

அதன் அடையாளம் மாறும் என்றும், உள்ளூர் மக்களின் உரிமை பறிக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதனால் மத்திய அரசு மும்மொழிக் கொள்கையை திரும்பப் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

மும்மொழிக் கொள்கையில் அஇஅதிமுக-விற்கு உடன்பாடு இல்லையென்றும், மத்திய அரசின் மும்மொழிக் கொள்கை குறித்து, புதுச்சேரி அரசு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக மாநிலச் செயலாளர் திரு. அன்பழகன் வலியுறுத்தி உள்ளார்.

***புதுச்சேரி சிபிஎஸ்இ - 3 (13)***

புதுச்சேரியில் பிரெஞ்ச் மொழி நீக்கம் மற்றும் ஹிந்தி மொழி திணிப்பு முயற்சிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில், மும்மொழிக் கொள்கை என்ற பெயரில், 6 முதல் 10ஆம் வகுப்பு வரையிலான பாடத்திட்டத்தில் இருந்து, பிரெஞ்ச் மொழியை நீக்கவிட்டு, ஹிந்தி அல்லது சமஸ்கிருதத்தை திணிக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு இறங்கி உள்ளது மிகவும் கண்டனத்திற்கு உரியது என்று அக்கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியின் பிரெஞ்ச் அடையாளத்தை அழிக்கும் வகையில், ஹிந்தி திணிப்பு நடைபெறுவதாகவும், அதனை எதிர்த்து போராட்டங்கள் நடத்தப்படும் என்று முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார். CBSE பாடத்திட்டத்தில் 6ஆம் வகுப்பு முதல் ஹந்தியை கட்டாய பாடமாக்க மத்திய அரசு எடுக்கும் முயற்சி ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

***□ால புரஸ்கார் (12)***

2026ஆம் ஆண்டிற்கான பிரதான் மந்திரி ராஷ்டிரிய பாலபுரஸ்கார் விருதுக்கான பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன. இந்த ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் தேதி நிலவரப்படி, 5 முதல் 18 வயதுக்குட்பட்டோருக்கான பரிந்துரைகள் awards.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

பிரதான் மந்திரி ராஷ்டிரிய பாலபுரஸ்கார் என்பது நாடு முழுவதும் உள்ள குழந்தைகளின் சிறப்பான சாதனைகளை கவுரவிக்க ஆண்டுதோறும் இந்திய குடியரசுத் தலைவரால் வழங்கப்படும் ஒரு முக்கியமான சிறப்பு விருதாகும்.

இந்த விருது, தைரியம், சமூக சேவை, சுற்றுச்சூழல், விளையாட்டு, கலை மற்றும் கலாச்சாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய

துறைகளில் சிறந்து விளங்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான விண்ணப்பங்கள் அதிகாரப்பூர்வ இணையதளம் வழியாக ஜுலை 31ஆம் தேதி வரை சமர்ப்பிக்கலாம்.

***ஜெய்சங்கர் (12)***

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று இந்தியா – நியூசிலாந்து இடையே கையெழுத்தான வர்த்தக ஒப்பந்த த்திற்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்த ஒப்பந்தம் வலுவான பொருளாதார கூட்டாண்மைகளை உருவாக்கும் என்றும், முதலீடுகளை அதிகரித்து இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு சந்தை அணுகலை மேம்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையேயான உறவுகளில் இந்த ஒப்பந்தம் ஒரு முக்கிய மைல் கல் என்று குறிப்பிட்ட அவர், இதன் மூலம் தொழில்முனைவோர், விவசாயிகள், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்கும் என்று தெரிவித்துள்ளார்.

***நிதி ஆயோக் (11)***

நிதி ஆயோக்கின் முழு நேர உறுப்பினராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் கோபர்தன் தாஸ், பிரதமர் திரு. நரேந்திர மோடியை இன்று சந்தித்தார். அவர்களது சந்திப்பு குறித்து, பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், டாக்டர் கோபர்தன் தாஸின் தனிப்பட்ட வாழ்க்கைப் பயணம் மிகவும் ஊக்கமளிக்கிறது என்றும், அவர் எதிர்கொண்ட ஒவ்வொரு சவாலும், சமூகத்திற்கு சேவை செய்யவும், துன்பங்களில் இருந்து விடுவிக்கவும், அவரது அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்தியது என்றும் தெரிவித்தார்.

பொது சுகாதாரம் மற்றும் நோய் எதிர்ப்பு அறிவியல் துறைகளில் அவரது சேவை அளப்பரியது என்றும் அவரது பணியும், கல்வி அறிவும் நாட்டின் கொள்கை வடிவமைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

***வானிலை (7)***

நாட்டின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் வெப்பம் மேலும் அதிகரிக்கக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஹரியானா, சண்டிகர், புதுடெல்லி, பீகார், குஜராத், ஹிமாச்சலப்பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் நாளை வரை வெப்பநிலை அதிகரிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம், கேரளம், ஆந்திரா உள்ளிட்ட தென் மாநிலங்களிலும், கடும் வெப்பம் நிலவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

***கிரிக்கெட் (2)***

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டியில், புதுடெல்லி, அருண் ஜெட்லி மைதானத்தில், இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்கும் ஆட்டத்தில், பெங்களூரு அணி – டெல்லி அணியை எதிர்கொள்கிறது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, 5 நாள் அரசுமுறைப் பயணமாக இமாச்சலப் பிரதேசம் சிம்லாவிற்கு இன்று வருகை தந்தார்.

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் பிஜேபியில் இணைந்த நடவடிக்கையை மாநிலங்களவைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று ஏற்றுக் கொண்டார்.

மருத்துவக் கல்விக்கான நீட் நுழைவுத் தேர்வு அனுமதிச் சீட்டை இன்று முதல் இணைய தளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

CBSE பாடத்திட்டத்தில் மூன்றாம் மொழி கற்பது அவசியமாகும் என்ற அறிவிப்பிற்கு புதுச்சேரி மாநிலத்தில் பல்வேறு கட்சித் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. NV / MS / RK